# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## <u>SESSIONS CASE NO. 09/2014</u>

## <u>Deposition of Witness for : PW 32</u>

**Name** : டாக்டர். வசந்தமூர்த்தி
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26-08-2022.**

**<u>முதல் விசாரணை</u> -**

நான் தற்போது வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பேராசியர் துணை தலைவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 13.1.2009 அன்று மதியம் 2.30 மணிக்கு நான் பணியில் இருந்த போது கோபால்சாமி 60 வயது ஆண் என்பவரின் பிரேத பரிசோதனை விண்ணப்பம் காவல் ஆய்வாளர், திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையம், தானிப்பாடி காவல் நிலைய குற்ற எண் 30/2009, தேதி 12.1.2009 பெறப்பட்டது. ஒப்படைத்த காவலர் பெயர் கிரேடு 1 - 446 பொன்முடி. பிரேதத்தின் அங்க அடையாளங்கள் வலது பக்க மார்பில் ஒரு கருப்பு மச்சம் வலது மற்றும் இடது துடையில் ஒரு கருப்பு மச்சம். பிரேத பரிசோதனை அதே தேதியல் மதியம் 2.45 மணிக்கு தொடங்கப்பட்டது. அப்போது இறப்பின் பின் ஏற்படும் விறைப்புத் தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது. சுமாரான உடல் நிலை கொண்ட ஆண் பிரேதம், வாய், உதடு, மற்றும் நாக்கு ஆகியவைகளின் ஜவ்வு பகுதிகள் நீல நிறமாக மாறிஇருந்தது. உடலில் வெளிப்புற காயங்கள் எதுவும் காணப்படவில்லை. மூளை , கபாலம், மூளையை சுற்றி உள்ள சவ்வு பகுதியில் ஆகியவைகள் சாதாரண நிலையில் இருந்தது. வெட்டிப் பார்த்ததில் ரத்த நாளங்கள் செறிந்தும், நீர்கோர்த்தும் காணப்பட்டது. அதில் சிறிய ரத்தக்கசிவுகள் காணப்பட்டன. குரல்வளை எலும்புகள் சாதாரணமாக இருந்தது. மூச்சக்குழாய் நுரைப்பும், ஜவ்வு பகுதிகள் செறிந்தும் காணப்பட்டது. நுரையீரல் நீர் கோர்த்தும், ரத்தம் கலந்த நுரைத்த நீர் வெளியேறி காணப்பட்டது. இருதயம் சாதாரணமாகவும், ரத்த நாளங்கள் சாதாரணமாகவும், காணப்பட்டது. அறைகளில் நீர்த்த ரத்தம் காணப்பட்டது. இறைப்பை வெளிப்புற பகுதி சிறிய கர்வேச்சல் பகுதியில் பைலோபிக் ஆன்டம் அருகில் நுரைத்து காணப்பட்டது. அதன் வழியாக இறைப்பையில் உள்ள நீர் செறிந்த உணவு ஆகியவை வெளியேறி காணப்பட்டது. வெட்டிப் பார்த்ததில் 100 மி.லி. ரத்தம் கலந்த நீர், ஆல்கஹால் வாடையுடன் காணப்பட்டது. இறைப்பையின் வெளியே வயிற்றுப் பகுதியில் 200 மி.லி. ரத்தம் கலந்த நீர் ஆல்கஹால் வாடையுடன் காணப்பட்டது. ஜவ்வு பகுதி செரித்து காணப்பட்டது. சிறுங்குடல் 50 மி. லி. ரத்தம் கலந்த நீர் காணப்பட்டது. ஜவ்வு பகுதி செரிந்து காணப்பட்டது. ஜவ்வு பகுதியின்

அடியில் சிறிய ரத்தக் கசிவுகள் காணப்பட்டன. பெருங்குடல் காற்றினால் விரிவடைந்து காணப்பட்டது. ஈரல், மண்ணீரல், சிறுநீரகம் நல்ல நிலையில் காணப்பட்டது. வெட்டிப் பார்த்ததில் செரிந்த நிலையில் காணப்பட்டது (Congested) பித்தப்பையில் பித்தம் இருந்தது. கணையம் செரித்து காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது. முதுகெலும்பு மற்றும் தண்டுவடம் சாதாரணமாக இருந்தது. மற்ற உடல் உள்ளுறுப்புகள் செரிந்து காணப்பட்டது. உடல் உள்ளுறுப்புகளை சேகரித்து ரசாயன பரிசோதனைக்கு 446 காவலர் பொன்முடி மூலம் ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நான் வழங்கிய பிணக்கூராய்வு அ.சா.ஆ.28. Toxicology Report Toxicology No. 691/2009 31.3.2009 அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ. 17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இறுதி அறிக்கை இறந்தவர் Methyl alchohol உட்கொண்ட காரணத்தினாலும், அதன் விளைவுகளால் இறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இறுதி கருத்துரை அ.சா.ஆ.29. Methyl alcohol மரணத்தை விளைக்கூடிய விஷம் என்றால் சரிதான். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

இறந்த கோபால் சாமியின் உடலில் இருந்து ரத்த மாதிரிகள் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டது. ரத்தத்தில் Mono Protopos, Ethyl Alcohol மற்றும் Methyl Alcohol காணப்பட்டது. நான் அனுப்பிய உடல் உறுப்புகளில் மேற்சொன்ன விஷங்கள் காணப்பட்டதாக அறிக்கை பெறப்பட்டது. Methyl Alcohol 60 மி.லி. உட்கொண்டாலே மரணம் விளைவிக்கும் என்றால் சரிதான். சென்னை தடய அறிவியல் துறைக்கு நாங்கள் அறிக்கை எதுவும் பெறவில்லை. ரசாயண பரிசோதனையில் ஈரல், சிறுநீரகம், வயிறு மற்றும் குடல், ரத்தம் ஆகியவைகளில் விஷம் இருந்ததாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிணத்தை 3 நாட்கள் கழித்து தோண்டி எடுத்து பகுப்பாய்வு செய்தால் அதன் தன்மைகள் மாறுபடும் என்றால் சரியல்ல. Ethyl alcohol உடலின் தன்மையை பொறுத்து பாதிப்பு ஏற்படும், அதிக அளவு உட்கொண்டால் பாதிப்பு உண்டாகும்.

ஒம்/- வசந்தமூர்த்தி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.